International Labour Organization

# நியாயமான மாற்றம்

1\. காலநிலை மாற்றம், மாசடைதல், வீழ்ச்சியடைந்த பல்லுயிரினத்துவம் போன்ற முக்கியமான சூழல் சவால்களை கையாள்வதில், நாடுகளும் வணிகங்களும் பசுமையான, வலிமையான காலநிலை-நடுநிலை பொருளாதாரங்களையும் சமூகங்களையும் நோக்கி நகர வேண்டும்.

2\. ஒரு நியாயமான மாற்றம் என்பது பொருளாதாரத்தை பசுமையாக்குகின்ற, நியாயமாகவும் பிரத்தியேகமாகவும் அனைவருக்கும், கண்ணியமான வேலை வாய்ப்புகளை உருவாக்குகின்ற ஒரு அம்சமாகும். இந்த மாற்றம் எவரையும் விட்டுவிடுவதில்லை.

3\. ஒரு நியாயமான மாற்றம் காலநிலை நடவடிக்கைக்கான பொருளாதார வாய்ப்புகளை அதிகரிக்கும். மேலும் சவால்களை குறைத்து கட்டுப்படுத்தும். இது பாதிக்கப்பட்ட அனைத்து அக்கறையுடைய தரப்புகளுக்கு இடையில் பயனுள்ள சமூக பேச்சுவார்த்தைகளின் ஊடாக இதை செய்கின்றது, மேலும் அடிப்படை தொழிலாளர் கொள்கைகளையும் உரிமைகளையும் மதிக்கின்றது.

4\. அனைத்து நாடுகளுக்கும், கிராமப்புற மக்களுக்கும் நகர்ப்புற மக்களுக்கும் அபிவிருத்தியின் சகல மட்டங்களிலும், அனைத்து பொருளாதாரத் துறைகளுக்கும் ஒரு நியாயமான மாற்றத்தை உறுதிசெய்வது முக்கியமானதாகும் - அது சக்தி விநியோக சங்கிலிக்கு மட்டும் மட்டுப்பட்டளவில் அல்ல.

5\. ஒரு நியாயமான மாற்றம் என்பது காலநிலை மாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஒரு செயல்முறையும் குறிக்கோளும் ஆகும்: ஒரு சமநிலை அடிப்படையில் தொழிலாளர்களுக்கும், தொழிமுயற்சியாளர்களுக்கும் மக்களுக்கும் உரிய தொழில் உருவாக்கம், சமூக நீதி மற்றும் நியாயமான மாற்றங்கள்.

# பசுமைத் தொழில்கள்

6\. பசுமைத் தொழில்கள் பச்சைவீட்டு வாயுக்களை கட்டுப்படுத்தி, கழிவுகளையும் மாசுகளையும் குறைக்கின்றன. மேலும் சூழல் முறைமைகளை பாதுகாத்து மீட்டெடுக்கின்றன. அதுமட்டுமன்றி சக்தியையும் மூலப்பொருட்களின் செயல்திறனையும் மேம்படுத்தி, காலநிலை மாற்றத்தின் விளைவுகளுக்கு இசைந்துகொடுக்க உதவுகின்றன.




7\. பசுமைத் தொழில்கள் விவசாயம், உற்பத்தி மற்றும் எரிசக்தி போன்ற துறைகளில் சூழலைப் பாதுகாத்து மறுசீரமைப்பதற்கு தூண்டுகின்றன.

8\. கண்ணியமான தொழில்கள், பணி நிலையத்தில் தொழில் பாதுகாப்பையும் சுகாதாரத்தையும் (OSH) மேம்படுத்துகின்ற தூய்மையான உற்பத்தி மற்றும் நுகர்வு, சக்தி வினைத்திறன் போன்ற செயன்முறைகளை உள்ளடக்கியிருப்பதால் ஒரு பசுமையான நியாயமான மாற்றத்தின் இணை-பயன்களாக விளங்குகின்றன.

9\. நிறுவன மட்டத்தில், சுற்றுச்சூழலுக்கு பயனளிக்கும் பொருட்களையும் சேவைகளையும் பசுமை தொழில்கள் உருவாக்க முடியும். உதாரணமாக, பசுமை கட்டிடங்கள் மற்றும் பாதிப்பற்ற போக்குவரத்து முறைகள்.

10\. சுற்றுச்சூழலுக்கு நட்பான செயற்பாடுகளுக்கு பசுமை தொழில்கள் பங்களிப்புச் செய்கின்றன. உதாரணமாக, நீரினை நுகரும் அளவினை குறைக்க அல்லது மீள்சுழற்சி கட்டமைப்பு முறைகளை பசுமை தொழில்கள் மேம்படுத்த முடியும்.

11\. மக்களுக்கும், பொருளாதாரத்திற்கும், சுற்றுச்சூழலுக்கும் பசுமை தொழில்கள் சிறந்ததாகும்.

© International Labour Organization 2023